## இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுதாபனம் - 2018

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுதாபனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து அதிகார சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அதனுடன் சம்பந்தபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுதாபனம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் அதிகார சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கூட்டுதாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச்

சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ் வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அதிகாரசபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க அதிகார சபை செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளக கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிகைகையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேனுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைடையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவனங்களிற்கு அவசியமானதாக உள்ளது.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01 பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம், செலவு நியாயமான மதிப்பின் (Fair Value) மீது முன்வைக்கப்பட வேண்டியிருப்பினும், கூட்டுதாபனத்தினால் கிரயம் ரூபா 2,671.81 மில்லியன் பெறுமதியான ஆதனம் பொறி உபகரணங்களினுடைய நியாயமான பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதி கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையினூடாக பல சந்தர்ப்பங்களில், ஆதனம் பொறி உபகரணங்களின் மதிப்பிடப்பட்ட பெறுமதி காட்டப்படுவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருப்பதனால் வருங்காலத்தில் இதற்கு தொடர்புடைய நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் படி நியாயமான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் முன்வைக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களின் பயன்பாட்டுடைய காலம் மீள் மதிப்பீட்டு குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கைக்கு அமைவாக மீளாய்வாண்டு இறுதியில், இன்னுமாக பயன்படுத்த இயலாது என அடையாளம் காணப்பட்ட ரூபா 10.79 மில்லியன் கிரயமுடைய இயந்திர உபகரணங்கள் மற்றும் மோட்டார் வாகனம் இலங்கை கணக்கீட்டு நியமம் 05 இற்கு முரன்பாடாக இன்னுமாக நடைமுறையல்லாத சொத்துக்களாக நிதி கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இயந்திர உபகரணங்கள் மற்றும் மோட்டார் வாகனம் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 05 இற்கு அமைவாக நடைமுறை சொத்துக்களாக வகைப்படுத்த 2019 கணக்கு அறிக்கைகள் தயாரிக்கப்படும் போது நாங்கள் நடவடிக்கை எடுப்போம். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் படி சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் முன்வைக்கப்படுதல் வேண்டும். |
| (இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 40 பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள கிரயம் ரூபா 92.48 மில்லியன் ஆன முதலிடப்பட்ட சொத்தின் நியாயமான பெறுமதி கணக்கிடப்பட்டு | வருங்காலத்தில் வேறு தேவைக்காக இதன் நியாயமான பெறுமதி கணக்கிடப்படும் போது அதன் அடிப்படையில் | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் படி முதலிடப்பட்ட சொத்துக்களின் |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அத்துடன் வாடகை அடிப்படையில் வெளி நபர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்த காணி , முதலிடப்பட்ட சொத்தாக கூட்டுதாபனத்தின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்படாததுடன், அக் காணிகளின் பெறுமதி தொடர்பாக தகவல்களும் கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை. | காணியின் நியாயமான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியாயமான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தல் வேண்டும். |
| (ஈ) | கூட்டுதாபனத்தினால் கிரயம் ரூபா 587.49 மில்லியன் மற்றும் எழுதப்பட்ட பெறுமதி ரூபா 304 மில்லியனான பல வகைக்குரிய சொத்துக்களின் பயனள்ள வாழ்க்கை காலம் மீளாய்வாண்டில் மீள மதிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறு பயன்பாட்டுக் காலம் மீள் மதிப்பிடப்பட்ட சொத்துக்களுக்குரிய ஒட்டுமொத்த பெறுமான தேய்வு ஒதுக்க கணக்கின் மீதிகள் ரூபா 160.34 மில்லியன் நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்திற்கு இணக்கப்படாமல் மீளாய்வாண்டின் பெறுமான தேய்வு செலவில் இருந்து குறைத்து காட்டப்பட்டிருத்தல் காரணமாக மீளாய்வாண்டின் இலாபம் அப் பெறுமதியிலேயே மிகையாக காணப்பட்டது. அவ்வாறே சொத்துக்களின் பயன்படு காலம் மீள மதிப்பிடல் வெளி நிபுணர்களை தொடர்புபடுத்தாமல் கூட்டுத்தாபனத்தின் மூன்று ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்டிருப்பதனால் தொடர்புடைய மதிப்பீடுகளின் துல்லியம் தொடர்பாக கணக்காய்வின் போது பிரச்சனையாகியது. | இது கணக்கீட்டு மதிப்பீடு வேறுபாடு என்பதனால் அவ் வேறுபாடு மீளாய்வாண்டிற்கு தொடர்புயை (prospectively) நிதிக் கூற்றினுள் சீராக்கப்பட்டதுடன் இதனூடாக கணக்கீட்டு நியமம் மீறப்படவில்லை. கூட்டுதாபனத்தின் அனுபவமிக்க பட்டய இயந்திர பொறியியளாளர்களால் ஆன குழுவொன்று இதற்காக பணியமர்த்தப்பட்டனர். அதனால் சொத்துக்களின் எஞ்சிய ஆயுட் காலம் தீர்மாணித்தல் நியாயமாக மற்றும் சரியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது என விசுவாசிக்கின்றோம். | சொத்துக்களின் ஆயுட் காலம் மீள் மதிப்பிடலின் விளைவு இலங்கை கணகீட்டு நியமங்களின் பிரகாரம் சீராக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் கொள்ளைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கணக்கீட்டு கொள்கை இல 2.5.1 (உ) பிரகாரம் மீளாய்வாண்டில் கூட்டுதாபனத்தின் ஒப்பந்த வருமானம் ஒப்பந்தங்களின் செயலாற்றல் (performance obligation) ஆய்வின் அடிப்படையில் அடையாளப்படுத்தப்படும் என குறிப்பிடப்பட்டிருப்பினும், மீளாய்வாண்டு இறுதியில் 21 ஒப்பந்தங்களில் செய்யப்பட்ட வேலைகள், பொறியியாளருடைய உறுதிப்படுத்தல் இல்லாது | மீளாய்வாண்டிற்காக கணக்கிடப்பட்ட அனைத்து செயற்திட்ட வருமானங்களும் வாடிக்கையாளர்களினால் உறுதி செய்யப்பட்ட பெறுமதியானதுடன் உறுதிப்படுத்தப்படாத எந்தவொரு பெறுமதியும் வருமானமாக கணக்கிலிடப்பட்டிருக்கவில்லை. பல சந்தர்ப்பங்களில் முன்வைக்கப்பட்ட பற்றுச் சீட்டுகளுக்காக வாடிக்கையாளர்களினால் | கணக்கீட்டு கொள்கைள் / கணகீட்டு நியமம் பிரகாரம் ஒப்பந்த வருமானம் செயலாற்றல் பொறுப்பின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| முன்வைக்கப்பட்ட பற்றுச்சீட்டுகளில் வேலை செய்யப்பட்ட பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு ஒப்பந்த வருமானம் ரூபா 951.05 மில்லியன் நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அப் பெறுமதி மொத்த ஒப்பந்த வருமானத்தில் 75 சதவீமாகும். | கொடுப்பணவு மேற்கொள்வதினூடாக அச் செயற்திட்டத்திற்கு தொடர்புடைய வேலை சான்றளிக்கப்பட்டமை உறுதி செய்யப்பட்டது. |

### 1.5.4. கணக்கீட்டுக் குறைப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கூட்டுதாபனத்தின் இருப்பு புத்தகங்கள் இற்றைப்படுத்தி பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் இந்த காரணத்தினால் கடந்த ஆண்டின் இறுதியில் ரூபா 267.32 மில்லியன் ஆக காணப்பட்ட மெதுவாக நகரும் இருப்பில் (slow moving stock) மீளாய்வாண்டு இறுதியில் காணப்பட்ட மெய் இருப்பு மற்றும் அதன் மாற்றம் கணக்காய்வின் போது அடையாளப்படுத்த முடியாது காணப்பட்டது. | செயற்படுத்தப்பட்டு வருகின்ற புதிய கணனி தரவு செயலாக்க அமைப்பு (SAP Business One) ஊடாக வருங்காலத்தில் மெதுவாக நகரும் இருப்பின் மாற்றங்கள் மேலும் விபரமாக மற்றும் சரியாக அடையாளப்படுத்த முடியும். | கூட்டுதாபனத்தில் காணப்படுகின்ற மெதுவாக நகருகின்ற இருப்பின் பெறுமதி சரியாக அடையாளப்படுத்தல் வேண்டும். |
| (ஆ) வத்தல மாபொல நகர சபையினால் கெரவலபிடிய குப்பை முகாமைத்துவம் பகுதிக்கு நீக்கப்பட்ட குப்பைக்காக பணம் அறவிடுவதற்கு கூட்டுத்தாபனம் தீர்மாணித்திருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டு இறுதியில் அவ் நிறுவனத்திலிருந்து பெறப்பட வேண்டியதாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 13.04 மில்லியன் ஆன பணம் மற்றும் அதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 6.69 மில்லியன் மேலாண்மை கடன் மீதி கணக்குகளில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கு புத்தகங்களில் காட்டப்படுகின்ற மீதிகள் இதற்கு முன்னைய காலத்திற்காக கணக்கிடப்பட்ட பற்றுச்சீட்டுக்களாக காணப்படுவதுடன் அம் மீதிகள் புத்தகங்களில் இருந்து நீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இன்னுமாக அறவிடப்படாத மீதிகள் புத்தகங்களில் இருந்து நீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டில் கெரவல பிடிய குப்பை முகாமைத்துவம் பகுதிக்கு குப்பை நீக்குகின்ற சூழல் சேவை நிறுவனமொன்றினால் ரூபா 100,000 ஆன மீள செலுத்தப்படுகின்ற வைப்பொன்று கூட்டுதாபனத்திற்கு பெற்றுக்கொடுக்கப்பட்டிருப்பினும் அவ் வைப்பு நிதிக் கூற்றுக்களுக்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் சீர் செய்ய 2019 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை தயாரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட அனைத்து கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் அதற்கு தொடர்புடைய பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | கிரயம் ரூபா 1.30 மில்லியன் ஆன கூட்டுதாபனத்தின் பிரதான அலுவலகத்தில் காணப்பட்ட உணவகம் 09 வருடங்களுக்கு முன்னர் உடைத்து நீக்கப்பட்டிருப்பினும் அப் பெறுமதி கணக்குகளிலிருந்து நீக்கப்படாமல் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களிலும் காட்டப்பட்டிருந்தது. | உங்களுடைய கருத்துடன் நாங்கள் உடண்படுகின்றோம். 2019 வருடத்தில் நிதிக் கூற்று தயாரிக்கும் போது தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளப்படும். இந்த கட்டிடம் 2002 வருடம் முழுதாக பெறுமானத்தேய்வுக்கு உட்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுகின்ற சொத்துக்கள் சரியாக அடையாளப்படுத்தப்பட்டு காணப்படுகின்ற சொத்துக்கள் மட்டும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | தெதுருஓய நீர் தேக்கத்தின் நீர் சுத்திகரித்தல் ஒப்பந்தத்திற்கு தொடர்பாக மீளாய்வாண்டிற்காக சான்றுருதிபடுத்தப்பட்ட வேலை பெறுமதி ரூபா 26.41 மில்லியன் ஆனதுடன், அப் பெறுமதி ரூபா 27.96 மில்லியன் ஆன வருமானமாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக ஒப்பந்த வருமானம் ரூபா 1.55 மில்லியனால் மிகையாக காணப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புடன் உடன்படுவதுடன் அது சரிசெய்யப்பட தேவையான நடவடிக்கைகள் வருங்காலத்தில் எடுப்பதற்கு உடன்படுகின்றேன். | சரியாக வருமானம் அடையாளப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து சரியான வருமானம் மட்டும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | கெரவலபிடிய குப்பை பகுதி நிர்மாணிக்கப்படுவதற்காக சனாதிபதி நிதியிலிருந்து கூட்டுத்தாபனத்திற்கு பெறப்பட்ட ரூபா 123.84 மில்லியன் ஆன வழங்கல் நிதிக் கூற்றுக்களில் ஒத்திவைக்கப்பட்ட வருமானத்தின் கீழ் (Differed Income) காட்டப்படுவதற்கு பதிலாக இப் பெறுமதி முற்பணத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | இது 2019 வருடத்தில் சரி செய்யப்பட்டுள்ளது. | வழங்கல்கள் சரியாக அடையாளப்படுத்தப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுதல் வேண்டும். |
| (எ) | கூட்டுதாபனத்திற்கு சொந்தமான ஒரகொடவத்த பிரதேசத்தில் உள்ள 05 காணி துண்டுகள் வருடாந்த குத்தகை அடிப்படையில் குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருப்பினும், அதற்காக குத்தகைகாரர்களுடன் 2012 வருடத்திலிருந்து குத்தகை ஒப்பந்தம் கைத்தாச்சிடப்பட்டு இருக்கவில்லை. அத்துடன் 2018 மே 15 ஆம் திகதி 05 காணி துண்டுகளின் புதிய குத்தகை பெறுமதி விலைமதிப்பு திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததினால் 2017 பெப்ரவரி 24 ஆம் திகதியிலிருந்து புதிய விலைமதிப்பு அடிப்படையில் குத்தகை கூலி அறவிடப்பட வேண்டியிருந்தது. அப் பணம் அறவிடப்படுவதற்கு கூட்டுத்தாபனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் பெறப்பட வேண்டிய வருமானம் கணக்கிடப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்தப்பட வேண்டிய குத்தகை பணம் செலுத்தப்பட நடவடிக்கை எடுக்குமாறு தொடர்புடைய தரப்பினருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் நினைவூட்டலும் முன்வைக்கப்பட்டுள்ளது. இன்னுமாக தொடர்புடைய பணம் செலுத்தப்படாததானால் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும். | குத்தகைகாரர்களுடன் முறையாக உடன்பட வேண்டியதுடன் ஒப்பந்தத்தின் பிரகாரம் வருமானம் அடையாளப்படுத்தப்பட்டு கணக்கிலிடப்பட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | கூட்டுத்தாபனத்தினால் 2012 வருடத்திலிருந்து பயன்பாடிற்கு எடுக்கப்படுகின்ற அகழ்வாராய்ச்சி இயந்திரம் மற்றும் 02 படகுகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்படாததுடன் 2010 ஆம் வருடத்தில் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 04 டிராக்டர் | அவதானிப்புடன் உடன்படுகின்றேன். இந்த அகழ்வாராய்ச்சி இயந்திரம், படகுகள் இரண்டிலும் மற்றும் 04 டிரெய்லர்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு 2019 வருடத்தினுள் நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான சொத்துக்கள் முறையாக மதிப்பிடப்பட்டு அப் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | டிரெய்லர்கள், பவுசர்களாக நவீனமயமாக்கப்பட்டிருப்பினும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அப் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிலிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஐ) | மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தினால் வேலை நிறைவு செய்யப்பட்ட குருநாகலை நீர் வழங்கல் செயற்திட்டத்திலிருந்து பெறப்பட வேண்டிய அனைத்து பணமும் வாடிக்கையாளரிடம் அறவிடப்பட்டிருப்பினும் மீளாய்வாண்டு இறுதியில் அச் செயற்திட்டத்திலிருந்து இன்னுமாக அறவிடப்பட வேண்டிய பணமாக ரூபா 1.54 மில்லியன் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. இதன் காரணத்தினால் நிதிக் கூற்றக்களில் காட்டப்பட்டிருந்த மேலாண்மை கடன் பெறுமதி அப் பெறுமானத்தில் மிகையாக காணப்பட்டது. | கணக்கு வைத்தலின் போது ஏற்பட்ட குறைப்பாட்டினால் இது ஏற்பட்டுள்ளதுடன் அது சரிசெய்வதற்கு இவ் வருடத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுகின்ற மீதிகள் கணக்கிடப்படுவதற்கு முதல் அப் பெறுமதிகளின் துல்லியத்தன்மை உறுதி செய்யப்படல் வேண்டும். |

**1.5.5 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாடுக் கணக்குகள் அல்லது பதிவெடுகள்**

| விடயம் | | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூ.மில்லியனில் | தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் ரூ.மில்லியனில் | வேறுபாடு ரூ.மில்லியனில் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் கூட்டுத்தாபனம் நிறைவேற்றிய 64 திறைசேரி செயற்திட்டங்களுக்காக ஏற்கப்பட்ட செலவு | 1,559.62 | 1,432.55 | 127.07 | அனுமதிக்கப்பட்ட விலைகளின் பிரகாரம் 2018 ஆம் வருடத்திற்காக பரிந்துரைக்கப்பட்ட பணமானது ரூபா 1,348 மில்லியன் ஆகும். அதன் படி திரைச்சேரி நிதி ஏற்பாட்டின் கீழ் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்களில் கூட்டத்தாபனம் ஏற்ற நட்டம் ரூபா 112 மில்லியன் ஆகும். | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள உறுப்படி பெறுமதி அதற்கு தொடர்புடைய இணைப்புடன் ஒப்பிட்டு சரியான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காட்டப்படல் வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ஆ) | கூட்டுத்தாபனம் கையகப்படுத்திக் கொண்ட காணிக்காக செலுத்தப்பட வேண்டிய இழப்பீடு | 41.86 | 42.87 | 1.01 | ரூபா 1.01 மில்லியன் ஆன மீள குடியிருப்பவர்களின் குடும்பங்களுக்கு உரிமை பத்திரம் பெற்று கொடுப்பதற்காக செலவாகும் என எதிர்பார்க்கப்படுகின்ற பணம் இதில் உள்ளடக்கப்பட்டில்லை. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள உறுப்படி பெறுமதி அதற்கு தொடர்புடைய இணைப்புடன் ஒப்பிட்டு சரியான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காட்டப்படல் வேண்டும். |

### 1.5.6 அங்கிகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| | அங்கிகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாள்வாண்டினுள் கூட்டுத்தாபனம் ரூபா 1,533 மில்லியன் ஆன நிலையான வைப்பு விடுவிக்கப்பட்டிருப்பினும் பணிப்பாளர் சபை அனுமதி பெற்று இருக்கவில்லை. | வருங்காலத்தில் நிலையான வைப்பு முதலீடு நீக்கப்படும் போது மற்றும் முதலிடும் போது பணிப்பாளர் சாையின் அனுமதி பெறுவதற்கு நடவடிக்கை எடுப்போம். | அளவைக்குறிய முதலீடுகள் விடுதலையாக்கப்படுவதற்காக பணிப்பாளர் சபையின் அனுமதி பெறப்படல் வேணடும். |
| (ஆ) | பெரிய கொழும்பு வெள்ள முகாமைத்துவம் மற்றும் சுற்றாடல் முன்னேற்ற செயற்திட்டத்தின் கீழ் நீர் தேங்கும் பிரதேசங்களாக ஒதுக்கப்படுவதற்கு கூட்டுத்தாபனத்தினால் கையகப்படுத்தப்பட்ட நாவல - ஹீன் ஓடை நீர் பாதுகாப்பு பிரதேசத்தினுள் காணபப்பட்ட 02 ஹெக்டயர் காணியளவு ரூபா 173.70 மில்லியன் செலவிடப்பட்டு கூட்டுத்தாபனத்தினால் கிரிகட் மைதானமொன்று நிர்மாணிக்கப்பட்டிருப்பினும் அதற்காக தேவையான அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. அத்துடன் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அம் மைதானம் பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இதன் பிரகாரம் பூமி பிரதேசம் நீர் தேங்கும் பிரதேசமாக செயற்படுத்தப்படுவதுடன் வரட்சியான காலநிலை நிலையில் Dry Weathered Play Ground ஒன்றாக பயன்படுத்தக்கூடிய வகையில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இவ் அபிவிருத்தி செய்யப்பட்ட மைதானம் கூட்டுதாபனத்தின் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களில் பணி புரிபவர்களின் விளையாட்டு திறனை மேம்படுத்தும் தேவைக்காக நடத்தப்படுகின்ற விளையாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகினறது. | கூட்டுத்தாபனம் கையகப்படுத்திக் கொண்ட நீர் பாதுகாப்பு பிரதேசம் அந் நோக்கங்களுக்காக பயன்படுத்தல் வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1. பெறவேண்டியவைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனம் கெரவலபிடிய குப்பை முகாமைத்துவம் பகுதிக்கு 25 நிறுவனங்களால் நீக்கப்படுகின்ற குப்பைகளுக்காக மீளாய்வாண்டு இறுதியில் அறவிடப்பட வேண்டி ரூபா 301.12 மில்லியன் காணப்பட்டதுடன் இதில் ரூபா 110.00 மில்லியன் ஒரு வருடத்திற்கு குறைந்த மற்றும் ரூபா 191.06 மில்லியன் ஒன்று தொடக்கம் இரண்டு வருட காலமாக நிலுவையாக காணப்பட்டது. எவ்வாறாயினும் கூட்டுத்தாபனத்தினால் தொடர்புடைய நிறுவனத்துடன் குப்பை நீக்குவதற்கு தொடர்புடைய நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்ட உடன்படிக்கைளுக்கு அனுகுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் இக் கடன் அறவிடப்படுவதற்கு கடினமாக காணப்பட்டது. | இலங்கை காணி அபிலிருத்தி கூட்டுதாபனத்தின் விடய நோக்கெல்லைக்கு குப்பை முகாமைத்துவம் உள்ளடக்கப்படாததனால் ஏனைய உள்ளுராட்சி சபைகளுடன் குப்பை பெறுதலுக்காக உடன்படிக்கைக்கு அனுகுதல் கடினமானதனால் ஒரு மெட்ரிக் டொண் குப்பைக்காக ரூபா 3,000/= க்கு கீழ் குப்பை நீக்குவதற்காக அனுமதி பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது. எனினும் ஒரு மெட்ரிக் டொண்காக ரூபா 3,000/= ஆன பணம் செலுத்தப்படல் கடினமென உள்ளுராட்சி நிறுவனங்களினால் காலத்திற்கு காலம் எமக்கு அறிவிக்கப்பட்டிருப்பினும் எங்களுடைய முழு நிலுவை பணம் செலுத்தப்பட கூறப்பட்டு எங்களால் காலத்திற்கு காலம் அந்நிறுவனத்திற்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டு இயலுமான வரையில் நிலுவைப் பணம் தீர்க்கப்பட்டுள்ளது. | பெறப்பட வேண்டிய பணம் விரைவாக அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வோட்டர் சேஜ் நிறுவனத்திற்கு கூட்டுத்தாபனம் பெற்றுக் கொடுக்கப்படடிருந்த புகையிரத உணவகத்திற்காக மீளாய்வாண்டு இறுதியில் கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 88.42 மில்லியன் மற்றும் அதற்கு தொடர்புடைய வட்டி 14.50 மில்லியன் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் பெறப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அக் கொடுக்ககல் வாங்கலுக்கு தொடர்புடைய இரு தரப்பினர்களுக்கு | இந்த பணம் வோட்டர் சேஜ் நிறுவனத்திலிருந்து அறவிடப்படுவதற்கு இன்னுமாக நடவடிக்கை எடுக்கப்படும். | பெறப்பட வேண்டிய பணம் விரைவாக அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இடையில் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த செயற்திட்ட்த்திற்காக திறைசேரி பணத்தில் செலவிடப்பட்ட ரூபா 37.02 மில்லியன் அறவிடப்படுதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் முழுவதாக வேலை நிறைவு செய்யப்பட்டிருந்த 05 செயற்திட்டங்களுக்குரிய ரூபா 266.84 மில்லியனான ஒப்பந்த நடவடிக்கைகளின் இறுதி பட்டியல் முன்வைக்கப்பட்டு 05 தொடக்கம் 11 மாதங்கள் கடந்திருப்பினும் அதற்காக கூட்டுத்தாபனம் ஏற்ற ரூபா 73.35 மில்லியன் கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட இயலாது காணப்பட்டது. | ஜனாதிபதி செயலகத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட ‘‘புபுதமு பொலன்னறுவை’’ நிதழ்ச்சி திட்டத்தின் கீழ் பொலன்னறுவை மாவட்ட செயலகத்தினூடாக கொடுப்பனவு செய்யப்பட்ட செயற்திட்டத்திற்காக திறைசேரியிலிருந்து சரியான காலத்தில் பணம் பெற்றுக் கொடுக்காததன் காரணத்தினால் கொடுப்பனவு நடவடிக்கைகள் தாமதமாகியது. | ஒப்பந்தங்களுக்காக கூட்டுத்தாபனத்திற்கு பெறப்பட வேண்டிய பணம் விரைவில் அறவிடப்படல் வேண்டும். |
| (ஈ) | அத்துடன் மீளாய்வாண்டு இறுதியில் முழுவதாக வேலை நிறைவு செய்யப்பட்ட ரூபா 254.92 மில்லியன் ஆன 04 ஒப்பந்தங்களுக்காக ரூபா 210.08 மில்லியன் ஆன பட்டியல் கூட்டுத்தாபனம் முன்வைக்கப்பட்டிருப்பினும் அதற்காக எந்தவொரு பணமும் கூட்டுத்தாபணத்திற்கு பெறப்பட்டிருக்கவில்லை. இதில் ரூபா 165.97 மில்லியன் கடந்த வருடத்தில் வேலை நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்த நடவடிக்கைகளுக்காக பெறப்பட வேண்டிய பெறுமதியாக காணப்பட்டது. | ஜனாதிபதி செயலகத்தினால் பணம் பெற்றுக் கொடுக்கப்படும் போது ஏற்பட்ட கால தாமதத்தினால் வருட இறுதியில் முன்வைக்கப்பட்டிருந்த பட்டியலுக்காக பணம் கொடுப்பனவு தாமதமானது. தற்போது வருட இறுதியில் காணப்பட்ட செலுத்தப்படாத பட்டியல் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | ஒப்பந்தங்களுக்காக கூட்டுத்தாபனத்திற்கு பெறப்பட வேண்டிய பணம் விரைவில் அறவிடப்படல் வேண்டும். |
| (உ) | கூட்டுத்தாபனத்தினால் கடந்த வருடங்களில் செயற்படுத்தப்பட்ட 12 ஒப்பந்தங்களுக்காக மீளாய்வாண்டு இறுதியில் கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 52.90 மில்லியன் அறவிடப்பட முடியாத கடனாக நீக்கப்படுவதற்கு பணிப்பாளர் சபை | அறவிடப்பட முடியாத நிலையில் காணப்படுகின்ற கடன்பட்டோர் மீதிகள் கணிசமான அளவு அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுட ன் அதற்காக தகுதியான நடவடிக்கைகள் வருங்காலத்தில் எடுக்கப்பட எதிர்பார்க்கப்படுகின்றது. | ஒப்பந்தங்களுக்காக கூட்டுத்தாபனத்திற்கு பெறப்பட வேண்டிய கடன் அறவிடல் நடவடிக்கை வினைத்திறனாக நிலைக்கு கொண்டு வந்து விரைவில் கடன் அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தீர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் கூட்டுத்தாபனத்தின் பிரமாண பத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விலைகள் அனுமதிக்கப்படாமை, ஒப்பந்தங்கள் இடையில் நிறுத்தப்படல், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பணம் காலத்திற்கேற்ப விண்ணப்பிக்காமை இந் நிலைமைக்கு நேரடியாக தாக்கப்பட்டிருந்தது. அத்துடன் மீளாய்வாண்டு இறுதியில் வாடிக்கையாளர்களிடமிருந்து கூட்டுத்ததாபனத்திற்கு பெறப்பட வேண்டிய 05 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதி பா 40.89 மில்லியன் ஆனதுடன் 05 தொடக்கம் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட அறவிடப்பட வேண்டிய பெறுமதி ரூபா 14.34 மில்லியன் ஆக காணப்பட்டது. இந்த மீதிகளும் விரைவில் அறவிடப்படுவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்காவிடின் அப் பெறுமதியும் கூட்டுத்தாபனம் இழக்கப்பட கூடிய பாரிய இடர் உள்ளதாக இன்னுமாக கணக்காய்வின் போது தெரிய வந்தது. | | |
| (ஊ) | மெதமுலன டீ.ஏ ராஜபக்ஷ நினைவு மைத்தியஸ்தானம் நிர்மாணித்தலுக்காக ரூபா 47.36 மில்லியன் பெறப்படல் வேண்டுமென நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருப்பினும் அந் நிறுவனத்தின் மீதி உறுதிப்படுத்தலின் அடிப்படையில் கூட்டுத்தாபனத்திற்கு எந்தவொரு பணமும் செலுத்த வேண்டியில்லை என காட்டப்பட்டிருந்தது. | இது தொடர்பாக வழக்கொன்றும் செயற்படுத்தப்பட்டுள்ளதனால் அவ் வழக்கின் இறுதியில் இன்னுமாக இந்த கூட்டடத்தாபனதத்திற்கு பெறப்பட வேண்டிய பணம் நிச்சயமாக உறுதி செய்யப்படும். | பெறப்பட வேண்டிய பணம் தொடர்பாக தொடர்புடைய நிறுவனத்துடன் கலந்தரையாடப்பட்டு அறவிடல்கள் விரைவில் மேற்கொள்ளப்பல் வேண்டும். |
| (எ) | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான கிபுலாவெலயில் காணப்பட்ட உணவக நிறுவனத்திற்கு குத்தகை செலுத்தலின் அடிப்படையில் கடந்த வருடத்திலிருந்து | அதற்காக செலவிடப்பட்டுள்ள பணம் பெற்றுக்கொள்வதற்காக எங்களால் பல சந்தர்ப்பங்களில் விண்ணப்பிக்கப்பட்டிருப்பினும் அவ் இடம் அவர்களுக்கு வகைப்படுத்தப்பட்டதன் பின்னர் | பெறப்பட வேண்டிய பணம் தொடர்பாக தொடர்புடைய நிறுவனத்துடன் கலந்தரையாடப்பட்டு அறவிடல்கள் |

| | | |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 24.58 மில்லியன் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அறவிடப்படுவதற்கு கூட்டுத்தாபனத்தினால் இயலாது காணப்பட்டது. | தொடர்புடைய பணம் பெற்றுக் கொடுக்கப்பட முடியும் என எங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | விரைவில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 1.6.2. செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தாபன சட்டத்தின் 3 அ (1) உறுப்படியின் கீழ் கூட்டுத்தாபனத்திற்கு கையகப்படுத்திக் கொண்டு பின்னர் விற்றலின் ஊடாக நீக்கப்படுகின்ற காணிக்காக நில ஆணையாளர் நாயகத்திற்கு மீளாய்வாண்டு இறுதியில் செலுத்த வேண்டிய பணம் ரூபா 49.62 மில்லியன் ஆக காணப்பட்டதுடன் அப் பணம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச செயளாலர்களுக்கு முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வெளி நிறுவனங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய பணம் விரைவில் செலுத்தப்பட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.3. முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டு இறுதியில் கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த முற்பணம் ரூபா 413.80 மில்லியன் ஆனதுடன் இதில் 04 தொடக்கம் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட மீதி ரூபா 55.9 ஆகவும் 02 தொடக்கம் 03 வருடங்களுக்கு இடைப்பட்ட மீதி ரூபா 55.7 மில்லியன் ஆகவும் காணப்பட்டது. | விலைகள் அனுமதிக்கப்படும் போது ஊற்பட்ட தாமதத்தினால் இறுதி பட்டியல் தீர்க்கப்பட தாமதமாகியது. தற்போது இறுதி பட்டியல் தீர்க்கப்படல் இறுதி கட்டத்திற்கு வந்திருப்பதனால் அதனுடன் அந்த மீதியும் தீர்க்கப்படும். | வேலைக்கு முன்கூட்டியே முற்பண பட்டியல் முன்வைக்கப்படும் போது ஒப்பந்தின் படி தீர்க்கப்பட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) ஹம்பந்தோட்டை சேவை நிலையம் நிர்மாணிப்பதற்காக 2014 வருடத்தில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ரூபா 68 மில்லியன் ஆன வேலைக்கு முன்னரான முற்பணம் தீர்க்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் மீளாய்வாண்டு இறுதியில் இந்த செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் இடையில் நிறுத்தப்பட்டிருந்தது. | இந்த பட்டியலில் வேலை சான்றுறுதிப்படுத்துவதற்காக ஆலோசனை நிறுவனமாக பரிந்துரைக்கப்பட்ட கட்டிடங்கள் திணைக்களம் மற்றும் மாகாண மற்றும் உள்ளூராட்சி அமைச்சு இடையில் காணப்பட வேண்டிய ஆலோசனை ஒப்பந்தத்திற்கு (Consultancy Agreement) கைச்சாத்திடாததனால் கட்டிட திணைக்களத்தினால் அப் பட்டியல் உறுதிப்படுத்தல் மறுக்கப்பட்டமை தெரிய வந்தது. | வேலைக்கு முன்கூட்டியே முற்பணம் முன்வைக்கப்படும் போது ஒப்பந்தின் படி தீர்க்கப்பட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் | | | |
| (i) திருத்தப்பட்ட நி.பி 371 (2) (ஆ) | • இதிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வாண்டில் 67 சந்தர்ப்பங்களின் போது ரூபா 100,000 விஞ்சி ரூபா 14,297,500 ஆன தற்காலிக இடைகால முற்பணம் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது. அத்துடன் நிதி எல்லைகள் விஞ்சி கொடுப்பனவு செய்தலுக்காக திறைசேரியின் முன் அனுமதி பெறப்படும் என கடந்த வருடத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பினும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அவ்வாறான அனுமதியொன்று பெறப்பட்டிருக்கவில்லை. | தற்காலிக இடைகால முற்பணம் எல்லைகள் அதிகரிப்பதற்கு அனுமதிக்காக திறைசேரிக்கு தற்போது கடிதமொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. | நிதி பிரமாணத்தின் பிரகாரம் முற்பணம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | • தற்காலிக இடைகால முற்பணம் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டியது ஏதாயினும் விசேட காரணத்திற்காக இருப்பினும் கூட்டுத்தாபனத்தின் சாதாரண நடவடிக்கையாகிய நிர்மாணிப்பு மற்றும் பெறுகை நடைமுறை பின்பற்றப்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்காகவும் வருடத்தினுள் 57 சந்தர்ப்பங்களில் ரூபா 12,731,000 ஆன தற்காலிக இடைகால முற்பணம் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது. | | |
| (ii) | திருத்தப்பட்ட நி.பி 371 (5) | மீளாய்வாண்டில் பெற்றுக்கொடுக்கப்பட்ட தற்காலிக இடைகால முற்பணங்களில் செலவிடப்படாமல் எஞ்சி காணப்பட்ட 03 முற்பணங்களுக்குரிய ரூபா 270,000 மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதி வரையிலும் தீர்க்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் தொடர்புடைய பணி நிறைவு செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் அந்த இடைகால முற்பணம் தீர்க்கப்பட வேண்டியிருப்பினும் மாதிரி கணக்காய்விற்கு உட்பட்ட 26 சந்தர்ப்பங்களில் ரூபா 5,749,000 ஆன இடைகால முற்பணம் தீர்க்கப்படுவதற்காக 31 தொடக்கம் 94 நாட்கள் வரையான காலம் கடத்தப்பட்டிருந்தது. அத்துடன் மீளாய்வாண்டினுள் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்த 14 முற்பணங்களுக்குரிய ரூபா 776, 000 குறித்த பணிக்காக செலவிடப்படாமல் 01 தொடக்கம் 59 நாட்கள் வரையான காலம் உத்தியோகத்தரிடம் வைக்கப்பட்டு மொத்த பணமும் மீண்டும் வங்கியில் வைப்பு செய்யப்பட்டிருந்தது. | தற்போது எங்களால் அனைத்து தற்காலிக இடைகால முற்பணங்களும் 10 நாட்களுக்குள் தீர்க்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் நினைவூட்டல் கடிதமும் தயாரிக்கப்பட்டுள்ளது. | நிதி பிரமாணத்தின் பிரகாரம் முற்பணம் பெற்றுக்கொடுத்தல் மற்றும் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1971 இன் 38 ஆம் இலக்க காசு சட்டம் 11 (பீ) உறுப்பரை | நிதி அமைச்சரின் உடன்பாடு இல்லாது மீளாய்வாண்டில் பணிப்பாளர் சபை அனுமதியின் அடிப்படையில் நிலையான மற்றும் குறுகிய கால வைப்புக்களில் ரூபா 3,737.85 மில்லியன் முதலிடப்பட்டிருந்தது. | காணப்படுகின்ற மிகை பணம், மிகை வருமானம் ஈட்டப்படுவதற்காக இலங்கை வங்கியில் அல்லது மக்கள் வங்கியில் நிலையான வைப்பு கணக்கொன்றில் முதலிடப்பட்டுள்ளது. | மிகைப் பணம் முதலீடு தொடர்பான நிதி அமைச்சரின் உடன்பாடு மற்றும் திறைசேரியின் அனுமதி பெறப்படுதல் வேண்டும். |
| (இ) | 1982 இன் 04 இலக்க மாநகர அபிவிருத்தி அதிகார சபையின் (திருத்தப்பட்ட) சட்டத்தின் 8 (ஒ) உறுப்புரை | தொடர்புடைய உள்ளூராட்சியிடமிருந்து அனுமதி பெறப்படாமல் கூட்டுத்தாபனத்தினால் புதிய பிரதான அலுவலக கட்டிட வளாகம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இதனால் வருகிற வருடங்களில் அனுமதி பெறப்படுவதற்காக ரூபா 12.04 மில்லியன் பொறுப்பு ஏற்பட்டிருந்தது. | நகர சபையின் ஆலோசனைக்கு ஏற்ப பின்வரும் நிறுவனங்களின் அனுமதி பெறப்படுவதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br>• தீயணைப்பு திணைக்களம்<br>• மத்திய சுற்றாடல் அதிகார சபை<br>• நகர அபிவிருத்தி அதிகார சபை | நகர அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அனுமதி பெறப்பட வேண்டிய அனைத்து நிறுவனங்களிடமிருந்தும் அனுமதி பெறப்பட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 1995 ஜுலை 12 திகதிய எஸ்ஈ1/ஐ/4/34 இலக்கமுடைய அரச காணி கையகப்படுத்தல் வழிக்காட்டி கோவை | (i) வழிக்காட்டி கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக கூட்டுத்தாபனம் காணி குத்தகைக்கு வழங்கும் போது அரசின் பிரதான மதீப்பீட்டாளரினால் மதிப்பிடப்பட்ட குத்தகை பெறுமதி, விசேட குழுவினால் மீண்டும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டிருக்கவில் லை. | நிகழ்காலத்தில் அவ்வாறான குழுவொன்று செயற்படுத்தப்படுவதாக தகவல் இல்லை. | காணி கையகப்படுத்தல் வழிக்காட்டி கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆலோகனைகளை பின்பற்றல் வேண்டும். |
| | | (ii) அத்துடன் வீட்ட திட்டமொன்று நிர்மாணிப்பதற்காக கூட்டத்தாபனத்திற்கு சொந்தமான காணியொன்று விற்றல் ஒப்பந்தத்தின் அடிப்படையில் 2007 ஆம் வருடத்தில் தனியார் நிறுவனத்திற்கு பெற்றுக்கொடுக்கப்படடிருப்பினும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் நிறுவனம் அவ் வீட்டு செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை. எனினும் அக் காணி மீண்டும் கூட்டுத்தாபனத்திற்கு கையகப்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டமா அதிபர் ஆலோசனைகளுக்கு அமைய காணியின் உடைமை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | வழிக்காட்டல் கோவையின் ஆலோசனைகளை பின்பற்றல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2003 ஜூன் 02 திகதிய பீஈடி/12 இலக்கமுடைய பொது வியாபார சுற்றறிக்கையின் 9.7 உறுப்புரை | திறைசேரியின் அனுமதி இல்லாது பணிப்பாளர் சபை அனுமதியின் அடிப்படையில் மட்டும் மீளாய்வாண்டில் பணி நிலைக்கு ரூபா 41.10 மில்லியன் ஆன ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | பணி நிலைக்கு ஊக்குவித்தல் நடவடிக்யையாக ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தப்பட பணிப்பாளர் சபை அனுமதியுடன் உயர் முகாமைத்துவம் தீர்மாணித்துள்ளது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தப்பட திறைசேரியின் அனுமதி பெறப்படல் வேண்டும். |
| (ஊ) | 2015 மே 25 திகதிய பீஈடி1/2015 இலக்கமுடைய பொது வியாபார சுற்றறிக்கை | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிக்கப்பட்ட எரிபொருள் எல்லை விஞ்சி மற்றும் தொடர்புடைய அனுமதி பெறப்படாமல் கூட்டுத்தாபனத்தின் 12 ஊழியர்களுக்காக ரூபா 1,173,051 பெறுமதியுடைய 9,537 லீட்டர் எரிபொருள் மீளாய்வாண்டில் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக பணிப்பாளர் சபையின் அனுமதி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் செலவு முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

ஒருகிணைந்த நிதிக் கூற்றின் பிரகாரம், மீளாய்வாண்டில் குழுவின் அல்லது கூட்டுத்தாபனத்தின் வரிக்கு முன் இலாபம் முறையாக ரூபா 1,683.74 மில்லியன் மற்றும் ரூபா 1,620.29 மில்லியன் ஆனதுடன் அதற்கு நேரொத்த ஆண்டின் வரிக்கு முன் இலாபம் முறையாக ரூபா 1,541.94 மற்றும் ரூபா 1,500.01 ஆக காணப்பட்டன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் குழுவின் அல்லது கூட்டுத்தாபனத்தின் வரிக்கு முன் இலாபம் முறையாக ரூபா 141.80 மில்லியன் மற்றும் ரூபா 120.28 மில்லியன் மிகையொன்று அவதானிக்கப்பட்டது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மணல் விற்றல் வருமானம் ரூபா 432 இனால் மற்றும் நிதி வருமானம் ரூபா 161 மில்லியனால் அதிகரித்தல் இந்த வரிக்கு முன் தேறிய இலாபம் வளர்ச்சிக்கு பிரதான காரணமாக காணப்பட்டது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்வைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டில் மற்றும் கடந்த நான்கு வருடங்கள் தொடர்பாக நிறுவனத்தின் நிதி விளைவு ஆய்வின் போது பின்வரும் விடயங்கள் அவகானிக்கப்பட்டன.

(அ) 2014 வருடத்திற்கு இணையாக மீளாய்வாண்டின் நேரடி செலவுகள் நான்கு வருட காலத்திற்குள் 39 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது.

(ஆ) கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் பணிப்பாளர் ஊதியம் 207 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது.

(இ) மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த வருமானத்தில் 67 சதவீதம் செயற்பாட்டு நடவடிக்கைகளினால் மற்றும் 33 சதவீதம் அரச வழங்கல்களினால் ஈட்டப்பட்டிருந்தது.

(ஈ) கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில்காணி விற்றல் வருமானம் மற்றும் நிர்மாணிப்பு நடவடிக்கைகளினால் முறையாக 65 சதவீதத்தினாலும் மற்றும் 15 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்திருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

(அ) கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிகர இலாப விகிதம் 4 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் இந் நிலைக்கு கடல் மணல் மற்றும் நிதி வருமானம் வளர்ச்சியடைதல் பிரதான காரணங்களாக காணப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் நடைமுறை பொறுப்பு, மொத்த சொத்துக்களில் மற்றும் மொத்த பொறுப்புக்களின் சதவீதமாக முறையாக 40 சதவீதம் மற்றும் 60 சதவீத உயர் பெறுமதியை கொண்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இணங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) கடல் மணல் கரை சேர்த்தல் செயற்திட்டத்தின் கொடுப்பனவு நடவடிக்கைகளுக்காக கூட்டுத்தாபனத்தினால் 2010 வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் வங்கி கணக்கு 2012 பெப்ரவரி வரை கொடுக்கல் வாங்களுக்காக பயன்படுத்தப்பட்ட பின்னர் அது செயலற்ற கணக்காக பேணப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் அக் கணக்கின் மீதி ஐ. அ. டொலர் 2.05 மில்லியன் அதாவது ரூபா 375.51 மில்லியனாக காணப்பட்டது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டில் கடல் மணல் மீண்டும் கரை சேர்த்தலுக்காக வெளிநாட்டு நிறுவனத்திற்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவிற்காக இந்த கணக்கு பயன்படுத்தப்படாமல் இலங்கை ரூபா டொலர்களுக்கு மாற்றப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருத்தல் கணக்காய்வின் போது பிரச்சனையாகியது. மேலும் இந்த காரணத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு பரிமாற்ற நட்டம் மற்றும் மேலதிக வங்கி கொடுப்பனவொன்றும் செலுத்தவும் நேர்ந்நிருந்தது. | கூட்டுத்தாபனத்திற்காக தற்போது கடல் மணல் கரை சேர்க்கின்ற ஒப்பந்தகாரர்களின் பட்டியல் தீர்க்கப்பட இந்த பணம் பயன்படுத்தக் கூடியது என பணிப்பாளர் சபைக்கு பரிந்துரைக்கப்பட்ட போது பணிப்பாளர் சபையின் தீர்மாணம், அப் பணம் வெளிநாட்டு பணத்திலேயே வைப்பொன்றாக பேணப்பட்டு செல்வது மிகவும் பொருந்தக்கூடியது என. | வெளிநாட்டு பணத்தில் ஆரம்பிக்கப்பட்ட வங்கி கணக்கு அக் கணக்கினை ஆரம்பித்த நோக்கத்திற்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கூட்டுத்தாபனத்தினால் கடந்த வருடத்திலிருந்து தியத பூங்கா சூழலில் செயற்படுத்தப்படுகின்ற படகு சேவைகளினால் அறவிடப்படுகின்ற கட்டணம் அதற்காக ஏற்கப்பட்ட செலவு தீர்க்கப்படுவதற்கு போதாததன் காரணத்தினால் மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 16.96 மில்லியன் ஆக காணப்பட்டது. | அது நட்டமான நிலையாக இருப்பினும் பயனிகள் போக்குவரத்து சேவை பொதுமக்கள் இடையில் பிரசித்திபடுத்தும் நோக்கத்துடன் செயற்படுத்தப்பட்ட மாலுமி செயற்திட்டமாக பேணப்படுவதற்காக கூட்டத்தாபன பணிப்பாளர் சபையின் அனுமதி பெறப்பட்டுள்ளது. | செயற்திட்ட செலவு பயனுள்ளதாக முகாமைத்துவப்படுத்தி செயற்திட்டம் பயனுள்ளதாக பேணப்படுதல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தினால் செயற்படுத்தப்பட்ட 64 திறைசேரி செயற்திட்டங்களுக்காக ரூபா 1559.62 மில்லியன் செலவிடப்பட்டிருப்பினும் அதற்காக பெறப்பட்ட பணம் ரூபா 1,348.73 மில்லியன் ஆனதனால் அச் செயற்திட்டத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு நேர்ந்த நட்டம் ரூபா 201.89 மில்லியன் ஆகும். இச் செயற்திட்ட சேவை நடவடிக்கைகளுக்காக திறைச்சேரி கூட்டுத்தாபனத்திற்கு 17 சதவீத சேவை வருமானமொன்று பெற்றுக் கொடுக்கப்படடிருப்பினும் இவ்வாறான நட்டம் ஏற்படல் கணக்காய்வின் போது பிரச்சனையாக காணப்பட்டது. | திறைச்சேரியின் நிதி ஏற்பாட்டின் கீழ் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்களில் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டம் ஏறத்தாழ ரூபா 112 மில்லியன் ஆகும். | மெய்யான மற்றும் சரியான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அப் பணம் திறைசேரியிலிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் செயற்திட்டம் முறையான முகாமைத்துவப்படுத்தி கிரயத்தினை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

-----------------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| | --------------------- | ---------------------------- | ---------------------- |
| (அ) | நிகழ்காலத்தில் நடைபெறுகின்ற அனுமதியில்லாது காணி நிரப்பல் தடை செய்வதற்கு கூட்டுத்தாபன சட்டத்தில் காணப்படுகினற ஏற்பாடுகள் போதுமானதாக இல்லாததனால் அவ் உறுப்படிகளை சரிசெய்து சட்டத்தினை திருத்துவதற்காக 2012 ஆம் வருடத்தில் அமைச்சரவைக்கு குறிப்பாணை முன்வைக்கப்பட்டிருப்பினும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் சட்டம் திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் சட்டத்தில் காணப்படுகின்ற | தொடர்புடைய திருத்தப்பட்ட சட்ட வரைபு அரசியலமைப்பின் நிதி ஏற்பாடு உடன் முரண்படாது என்று உறுதி சட்டமா அதிபர் திணைக்களத்தினால் முன்வைக்கப்படவுள்ளது. | கூட்டுத்தாபன சட்டம் விரைவில் திருத்தப்படுவதற்கு அமைச்சின் தலையீட்டின் அடிப்படையில் விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறைப்பாடுகளின் அடிப்படையில் அனுமதியில்லாது காணி நிரப்பல் தொடர்பாக கூட்டுத்தாபனத்திற்கு பெறப்படுகின்ற குற்றச்சாட்டுக்களுக்காக போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட கூட்டுத்தாபனத்திற்கு இயலாது காணப்பட்டது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தினால் சந்தையில் காணப்பட்ட ரூபா 801 மில்லியன் பெறுமதியான 06 நிர்மாணிப்பு ஒப்பந்தங்களுக்காக மட்டும் போட்டியாக ஏலம் கோரப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 296 மில்லியன் ஆன 03 ஒப்பந்தங்கள் மட்டும் பெறப்பட்டிருந்தது. இந்த நிலையின் பிரகாரம் கூட்டுத்தாபனம் திறந்த சந்தையில் காணப்படுகின்ற போட்டியுள்ள ஒப்பந்தங்கள் பெற்றுக்கொள்வதற்காக போதுமானதாக அவதானிக்கப்பட்டிராததுடன் திறைசேரி நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் பெறப்படுகின்ற ஒப்பந்த நடவடிக்கைகள் மட்டும் நிறைவேற்றலினால் கூட்டுத்தாபனத்திற்கு பெறப்பட கூடியதாக காணப்பட்ட சந்தை பங்கு இழக்கப்பட்டிருந்தது. | 2018 வருடத்தில் 06 போட்டியான ஒப்பந்தங்களில் 03 பெறப்பட்டிருந்ததுடன் வருங்காலத்தில் இந்த போக்கை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கின்றோம். | கூட்டுத்தாபன சட்டத்தின் நோக்கமொன்றாகிய நிர்மாணித்தல் துறையில் போட்டியாளராகல் என்ற நோக்கம் நிறைவேற்றுவதற்கு பயனுள்ளதாக ஒப்பந்த முகாமைத்துவம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணியொன்று, பிறழான கருத்துக்கள் பிழையாக கூறப்பட்டு 2000 ஏப்ரல் 06 ஆம் திகதி வெளி வாங்குனருக்கு ரூபா 5.83 மில்லியனுக்கு விற்றதன் காரணத்தினால் அந்த வாங்குனரினால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் வழக்கின் முடிவு படி மிளாய்வாண்டில் அந்த வாங்குனருக்கு ரூபா 12.28 மில்லியன் கொடுப்பனவு செய்ய நேர்ந்தது. மேலும் இந்த விடயங்களுக்கு பொறப்பு கூற வேண்டிய ஊழியர்கள் | 100/SLLRDC இலக்கமுடைய திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பினும் வீடு நிர்மாணித்தலின் போது 42/SLLRDC இலக்கமுடைய திட்டம் பயன்படுத்தப்பட்டிருப்பதனால் அத் திட்டத்தின் கீழ் டென்டர் அழைத்தல் நடைப்பெற்றமை கோப்பின் தகவல்களுக்கமைய தெரியவந்தது. | பிறழாக பணி புரிந்த ஊழியர்களுக்கு விரோதமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு நட்டத்தினை மீள் நிரப்பிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக எந்தவொரு நடவடிக்கை எடுப்பதற்கும் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஈ) | மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் இயந்திர உபகரண பிரிவியின் நட்டம் ரூபா 97 மில்லியனானதுடன் அங்கு வருடாந்த கிரயமாக காணப்பட்ட ரூபா 568 மில்லியனிலுள் ரூபா 373 மில்லியன் தொழிலாளர் கிரயமும் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் மொத்த கிரயத்தில் இது 66 சதவீதமாகும். இயந்திர உபகரண பிரிவில் மிகையான ஊழியர்கள் இருந்தமை இந் நிலைக்கு நேரடியாக தாக்கியது. | இயந்திர உபகரண பிரிவுக்குள் நிலையான ஊழியர்கள் 400 ஐ விஞ்சி உள்ளதுடன் பிரிவின் சம்பள பெறுமதி மிக கூடிய பெறுமதியில் காணப்பட்டது. | கூட்டுத்தாபனத்தின் மிகையான ஊழியர்கள் பயனுள்ள வகையில் கூட்டுத்தாபனத்தின் பிரிவுகளுக்கிடையில் இணைக்கப்படல் வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பெரிய கொழும்பு வெள்ள கட்டுப்பாடு மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் கூட்டுத்தாபனத்திற்கு பணிக்கப்பட்ட 378 ஹெக்டயர் காணி 1996 ஆகஸ்து 15 திகதிய 96/1760/111/125 இலக்க அமைச்சரவை தீர்மாணத்தின் படி குறுகிய கால குத்தகையின் அடிப்படையில் பெற்றுக்கொடுப்பதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்காததினால் 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து கூட்டுத்தாபனத்திற்கு சேர்க்கக் கூடியதாக காணப்பட்ட குத்தகை கூலி வருமானம் இழக்கப்பட்டிருந்தது. அவ்வாறு பணிக்கப்பட்ட காணிகளில் அனுமதியில்லாத குடியிருப்பு மற்றும் அனுமதியில்லாத மறுசீரமைப்பு அகற்றலின் முழு பொறுப்பு (Sole Responsibility) கூட்டுத்தாபனத்திற்கு | கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் எல்லையின் வெளியே காணப்பட்ட சிறிய காணி துண்டுகள் குத்தகைக்கு கொடுத்தல் தொடர்பாக அமைச்சில் ஆலோசனைகள் பெறுவதற்கும் அதன் பிரகாரம் எஞ்சிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் தீர்மாணிக்கப்பட்டுள்ளது. 2014 வருடத்திலிருந்து தற்போது வரை பெரிய கொழும்பு வெள்ள கட்டுப்பாடு செயற்திட்டத்தின் கீழ் அரசிற்கு கையகப்படுத்தப்பட்ட காணிகளில் எல்லைகள் மீண்டும் அமர்த்தப்படுவதற்காக அங்கரிகரிக்கப்படாத பறிமுதல் செயற்திட்டத்தின் கீழ் கோட்டே, கொலொன்னாவ, பாராளுமன்ற மேல் நீர் நிலை மற்றும் ஜுன் ஓடை ஈர நிலங்களுக்கு தொடர்பாக எல்லை தூண்கள் 1519 அளவு நடப்பட்டுள்ளது. | அமைச்சரவையின் தீர்மாணத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்கு பணிக்கப்பட்ட காணிகள் தொடர்புடைய நோக்கங்கள் மற்றும் பணிகளுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணிக்கப்பட்டிருப்பினும், மீளாய்வாண்டு இறுதியில் அதில் 76 ஹேக்கர் காணி மட்டும் அனுமதியில்லாத குடியிருப்பாளர்களினால் கையகப்படுத்தியிருத்தல் மற்றும் மேலும் 81 ஹேக்கர் கூட்டுத்தாபனத்தினால் அகற்றப்பட்டிருந்தமையினால் (Divesting) அமைச்சரவையினால் எதிர்பார்க்கப்பட்ட பணி நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனம் தோல்வி கண்டிருந்தது. | | |
| (ஆ) | 16/0204/724/014 இலக்க மற்றும் 2016 சனவரி 22 திகதிய அமைச்சரவை தீர்மாணத்தின் பிரகாரம் ஓடை வழியின் குறுக்காக பயனாளிகள் போக்குவரத்தது வலையமைப்பை அறிமுகப்படுத்தி கொடுக்கவும், படகுகளை பயன்படுத்தி பொழுதுபோக்கை பெற்றுக் கொடுக்கவும் மற்றும் மிதக்கும் சந்தைகளை உருவாக்கவும் அனுமதி வழங்கப்பட்டிருப்பினும் மீளாய்வாண்டு இறுதியில் கூட்டுத்தாபனம் திறைசேரி பணத்தினை பயன்படுத்தி 03 சுவர்ணத்தூண்கள் மட்டும் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எனவே, 2016 ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அமைச்சரவை தீர்மாணத்தின் பிரகாரம் பயணர் போக்குவரத்து சேவையொன்று ஆரம்பிப்பதில் கூட்டுத்தாபனத்தினால் முடியாது காணப்பட்டது. | பேரே குளத்தினூடாக மாலுமி செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டதன் பின்னர் அவ் அனுபவங்கள் மற்றும் கற்றுக்கொண்ட பாடங்களைக் கொண்டு வெள்ளவத்தை – பத்தரமுல்ல ஓடை வழியினூடாகவும் படகு சேவை தகுதியான முறையுடன் அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அமைச்சரவை முடிவினுள் குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் நிறைவேற்றப்பட்டு குறிக்கப்பட்ட சேவைகள் மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 1968 இன் 15 இலக்க இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபன சட்டத்தின் 2 (ஆ) 1 உறுப்புரையின் பிரகாரம் நாடு முழுவதும் மாகாண மட்டத்தில் காணப்படும் கீழ் சதுப்பு நிலங்கள், தரிசு நிலங்கள் அல்லது சேற்று நிலங்கள் அடையாளப்படுத்தப்பட்டு அங்கிகரிக்கப்படாத நில | முதுராஜவல அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட நில அளவில் பகுதியொன்று கடல் மணல் சேர்த்து வைப்பதற்கு பயன்படுத்தப்படுவதுடன் பகுதியொன்று குப்பை முகாமைத்துவ செயற்திட்டங்களுக்காக பயன்படுத்தப்பட்டள்ளது. எஞ்சிய காணி துண்டுகள் | சட்டத்திலுள்ள ஏற்பாடுளுக்கு அமைவாக கையகப்படுத்தப்பட்ட காணிகள் தொடர்புடைய பணிகளுக்காக ஈடுப்படுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிரப்புதலை கட்டுப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்யக்கூடிய வகையில் அவற்றை வர்த்தமாணி அறிவிப்புக்கள் மூலம் பிரசித்திப்படுத்தவும் கூட்டுத்தாபனத்திற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பினும் மீளாய்வாண்டு இறுதியில் அவ்வாறு வர்த்தமாணி பிரசுரிக்கப்பட்ட மாகாண எண்ணிக்கை 06 க்கு மட்டுபடுபடுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே சட்டத்தின் 8 (அ) உறுப்புரையின் பிரகாரம் நிரப்புதல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கு கையகப்படுத்தப்படுகின்ற காணிகள், கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்கு, வணிக வியாபாரம் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்காக மேம்படுத்த வேண்டியிருப்பினும் கூட்டுத்தாபனத்தினால் அவ்வாறு 1995 வருடத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கையகப்படுத்தப்பட்ட முதுராஜவல மற்றும் முதுன் ஓடை பிரதேசங்களில் காணி 800 ஹேக்கர் அளவில் மீளாய்வாண்டு இறுதியில் 23 வருடங்கள் கடந்திருப்பினும் அதில் மேம்படுத்தப்பட்ட அளவு 522 ஹேக்கர், அதாவது 65 சதவீதம் குறைந்த பெறுமதியாகியது. | நிரப்பப்படுவதற்காக மண் குறைபாடு காரணமாக கடல் மணல் பம்ப் செய்வதற்கு திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. | |
| (ஈ) | கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டு இறுதியில் 05 பிரசேச செயலாளர் பகுதிகளுக்குரிய நீர் தேங்கும் பிரதேசத்திற்குள் மேற்கொள்ளப்பட்டுள்ள அங்கிகரிக்கப்படாத நிர்மாணிப்புக்கள் மற்றும் நிரப்பல்கள் 1321 அடையாளப்படுத்தப்பட்டிருப்பினு ம் அவ் அடையாளப்படுத்தப்பட்ட நிர்மாணிப்புக்கள் நீக்குவதற்கு இயலாதிருந்தது. | கூட்டுத்தாபனத்தினால் நீக்குவதற்கு முடியுமான நிரப்பல்கள் மற்றும் நிர்மாணிப்புக்கள் கூட்டுத்தாபனத்தினூடாக நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அடையாளப்படுத்தப்பட்ட அனைத்து அங்கிகரிக்கப்படாத நிரப்பல்கள் மற்றும் நிர்மாணிப்புக்களும் நீக்குவதற்காக கூட்டுத்தாபனத்திற்கு அதிகாரம் இல்லாததுடன் நீதிமன்ற தீர்ப்பினூடாக அந் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | கூட்டுத்தாபன சட்டத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைய அங்கிகரிக்கப்படாத நிர்மாணிப்புக்கள் மற்றும் நிரப்பல்கள் தொடர்பாக கூட்டுத்தாபனம் விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | ஸ்ரீ ஜயவர்த்தனபுர சரணாலயத்தில் காணப்படுகின்ற தியசரு பூங்காவில் உத்தேசிக்கப்பட்ட நிர்மாணிப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக தொடர்புடைய நிறுவனங்களில் இருந்து முன் அனுமதி பெறப்படாமல் கூட்டுத்தாபனம் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டதனால் அந் நிர்மாணிப்புக்களை நிறுத்துமாறு வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களதத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இக் காரணத்தினால் மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 3.48 மில்லியன் செலவிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் அந் நடவடிக்கைகள் 2019 ஆகஸ்து மாதம் வரையிலும் மீண்டும் ஆரம்பிப்பதற்கு இயலாதிருந்தது. | பூர்வாங்க சுற்றுச் சூழல் ஆய்வு அறிக்கையொன்று 2019 ஆகஸ்து மாதம் வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களதத்திற்கு பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது. அதற்கு அனுமதி கிடைக்கப்பெற்றவுடனே எஞ்சிய நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | நிர்மாணிப்புகளுக்குரிய பூர்வாங்க அனுமதிகள் பெறப்பட்டவுடன் நிர்மாணிப்புக்கள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | கடல் மணல் கண மீட்டர் 04 மில்லியன், அமெரிக்க டொலர்கள் 19.97 மில்லியனுக்கு பெற்றுக்கொள்வதற்கு வெளிநாட்டு நிறுவனத்துடன் கூட்டுத்தாபனம் 2018 ஏப்ரல் 10 ஆம் திகதி உடன்படிக்கைக்கு உட்பட்டிருந்ததுடன் அதற்கு தொடர்புடைய புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் 2019 ஜுன் 30 ஆகும் போது கடல் மணல் கண மீட்டர் 04 மில்லியன் கரைசேர்ப்பதற்கு உடன்பட்டிருந்தது. எனினும் அத்திகதிக்கு கூட்டுத்தாபனத்திற்கு மணல் கண மீட்டர் 2,120,480 பெறப்பட்டிருந்ததுடன் அதற்காக தாமத கட்டணம் அறவிடப்படுவதற்கு தொடர்புடைய நிபந்தனைகள் ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் இன்னுமாக பெறப்பட வேண்டிய மணல் கண மீட்டர் | மழைக் காலநிலை மற்றும் அகழி இயந்திரத்தின் பராமரிப்பு நடவடிக்கைகள் காரணத்தினால் அது 2019 மார்ச் 20 ஆம் திகதி கொண்டு செல்லப்பட்டது, எனினும் அகழ்வாராட்சி இல்லாமல், தற்போது சேர்க்கப்பட்டுள்ள மணல் இருப்பினூடாக சந்தை கேள்வி சந்திக்கப்பட முடியுமானதுடன் அகழி இயந்திரத்திரம் மீண்டும் வந்ததன் பின்னர் ஒப்பந்தத்தின் பிரகாரம் எஞ்சிய மணல் அளவு ஒதுக்கி வைக்க எதிர்பார்க்கப்படுகின்றது. | ஒப்பந்தத்தின் பிரகாரம் மணல் இருப்பு சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 1.88 மில்லியன் பெற்றுக்கொள்வதற்கு திருத்தப்பட்ட காலவரை எதுவும் இல்லை. | | |
| (எ) | கூட்டுத்தாபனத்தினால் முதன்மை சாத்தியக்கூறு ஆய்வில்லாது மாதிநாகொடை உப வழியொன்று நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 112 மில்லியன் செலவிடப்பட்டிருப்பினும் செயற்திட்டம் ஆரம்பித்ததன் பின்னர் காணி கையகப்படுத்திக்கொள்வதற்கு கூட்டுத்தாபனம் செயற்பட்ட போது ஏற்பட்ட பிரச்சனையான நிலைமையினால் இந்த நிர்மாணிப்பு இடையில் நிறுத்தப்பட்டது. அதனால் செயற்திட்டத்திற்காக ஏற்க்கப்பட்ட செலவு வீணான செலவாக அவதாணிக்கப்பட்டது. | செயற்திட்டம் செயற்படுத்துவதற்காக அணுகல் வழியொன்று இல்லாததனால் அணுகல் வழி நிர்மாணிக்கப்படுவதுடன், அது எதிர்காலத்தில் ஏற்பட கூடிய வாகன நெரிசல் குறைத்துக் கொள்வதற்கான உப வழியொன்றாகவும் பயன்படுத்துவதற்காக அது புதகமுவ வழிக்கு தொடர்புபடுத்த வேண்டியதுடன், அக் காணி கையகப்படுத்திக் கொள்வதில் பிரச்சனைகள் உருவாகியது. | செயற்திட்டம் ஆரம்பிப்பதற்கு முதல் அச் செயற்திட்டம் தொடர்பாக சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு ஏற்படக் கூடிய பிரச்சனைகளை முதலில் அடையாளப்படுத்தப்பட்டு பிரச்சனையான நிலைமைகளை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | கூட்டுத்தாபனம் எந்தவொரு முதன்மை ஆய்வு மற்றும் திட்டம் இல்லாது பொல்கொடை ஓடையின் வரம்பு அபிவிருத்தி செய்தல் செயற்திட்டம் செயற்படுத்தல் காரணமாக அவ் ஓடை வரம்பு உடைந்து விழுந்ததினால் செயற்திட்டம் இடையில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் ஓடை வரம்பு மீண்டும் புணரமைப்பதற்காக கூட்டுத்தாபனம் ரூபா 15.23 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | ஆபத்து நிலை குறைவாக காணப்பட்ட மற்றும் செய்யக்கூடிய ஓடை வழி வரம்பு மட்டும் மேற்கொள்ளப்பட்டு மிக ஆபத்தான ஓடை வரம்பு பகுதிகள் மேற்கொள்ளப்படாமல் அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டது. | செயற்திட்டம் ஆரம்பிப்பதற்கு முதல் சாத்தியக்கூறு மற்றும் தொழில்நுட்ப ஆய்வு மேற்கொள்வதினூடாக ஏற்படக்கூடிய இடர் நிலை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 சர்ச்சை தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| கூட்டுத்தாபன சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்கு வேறு தரப்பினர்களுக்கு கடன் பெற்றுக்கொடுப்பதற்கு முடியாதிருப்பினும் கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டில் அதன் நிர்வாக நிறுவனத்திற்கு கடல் மணல் பொதி செய்யப்பட்டு விற்றல் செயற்திட்த்திற்காக ரூபா 200 மில்லியன் கடன் பணம் பெற்றுக்கொடுப்பதற்கு உடன்பட்டு அதில் ரூபா 118.75 மில்லியன் கடன் பணம் மீளாய்வாண்டு இறுதியில் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக உடன்படிக்கை ஏற்படுத்தியிருந்தது 2019 ஏப்ரல் 04 திகதியிலாகும். அத்துடன் அக் கடன் பணம் மீண்டும் செலுத்தப்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள திறன் தொடர்பாகவும் கூட்டுத்தாபனம் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் இந் நிலைமை 2003 யூன் 02 திகதிய பீஈடி 12 இலக்கமுடைய நல்லாலுகை தொடர்புடைய வழிக்காட்டியில் 8.1.4 உறுப்புரைக்கு முரணாக காணப்பட்டது. | கூட்டுத்தாபனத்தின் கீழ் காணப்படுகின்ற REDECO நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கடல் மணல் கழுவல் மற்றும் பொதி செய்தல் செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் வணிக வட்டி வீதங்களின் கீழ் ரூபா 200 மில்லியன் பணம் 12 வருடங்களில் கொடுப்பனவு அடிப்படையில் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. இச் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டு வெற்றி பெற்றதன் பின்னர் பெற்றுக் கொடுக்கப்பட்ட கடன் பணம் மற்றும் வட்டி யும், அதற்கு மேலாக REDECO நிறுவனத்திலிருந்து கூட்டத்தாபனத்திற்கு பெறவேண்டிய மற்றய பணங்களும் அறவிடப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | கூட்டுத்தாபனம் கடன் பணம் பெற்றுக் கொடுக்கும் போது அப் பணம் மீண்டும் அறவிடப்படுவதற்கான சாத்தியக்கூறு ஆய்வு செய்யப்பட வேண்டியதுடன் சட்டத்தின் அதிகாரத்திற்கேற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான பெல்லன்விலயில் காணப்பட்ட 06 கடைகள் 2016 வருடத்திலிருந்து கூலி அடிப்படையில் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் மூடப்பட்டிருந்ததுடன் அந்த காரணத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு இழக்கப்பட்ட வருமானம் ரூபா 21.60 மில்லியனாக காணப்பட்டது. | 06 கடைகள் உள்ளடங்கலாக மேல் மாடியும் உடற்பயிற்சி மையமொன்று (a Gymnasium) மற்றும் வேறு வியாபார சந்தர்ப்பங்களாக பயன்படுத்தக்கூடிய திறமை தொடர்பாக கூட்டுத்தாபனம் தற்போது கவனத்திற் கொண்டுள்ளது. | கூட்டுத்தாபனத்தின் சொத்துக்கள் வினைத்திறனாக பயன்படுத்துவதினூடாக வருமானம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.6 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளிலுள்ள தாமதங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் வாடிக்கையாளர் செயற்திட்டமாகிய கிரி மண்டல மாவத்தை உத்தேசிக்கப்பட்ட வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் நீர் வள முகாமைத்துவ மையம் நிர்மாணித்தல் செயற்திட்டத்தின் வேலை கடந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டு மீளாய்வாண்டில் நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருப்பினும் அத் திகதிக்கு ஒப்பந்தத்தின் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் முறையாக 10 சதவீதம் மற்றும் 15 சதவீததினால் கீழ் மட்டத்தில் காணப்பட்டது. கூட்டுத்தாபனத்தின் ஒப்பந்த நடவடிக்கைகள் தொடர்பாக முறையான முகாமைத்துவமொன்று இல்லாமை இந்நிலைக்கு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. மேலும் இந்த ஒப்பந்தத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு நட்டமொன்று ஏற்படக்கூடிய இடர் கணக்காய்வின் போது நீக்கமுடியாதிருந்தது. | மதிப்பீடு தயாரிக்கப்படடிருப்பது 2017 ஆம் ஆண்டில் என்பதனால் இந்த விலையின் கீழ் செயற்திட்டத்தினை மேற்கொள்ளும் போது செயற்திட்டத்திற்கு நட்டம் ஏற்படக் கூடும் எனவும் இவ் விலைகள் இன்று காணப்படுகின்ற விலைக்கு திருத்தப்படவும் அமைச்சிடம் கோரப்பட்டுள்ளது. திட்டம் திருத்தப்படவும் காண்படுகின்ற அரசின் சட்ட பிரமாணங்களுக்கமைய பெறுகைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதனால் அதற்காகவும் காலம் கடந்திருந்தது. மேலும் நாட்டினுள் தொழிலாளர் பற்றாக்குறை இருந்ததுடன் தொழிலாளர் இணைக்கப்படுவதற்கு வெற்றிடங்கள் அழைக்கப்பட்டிருப்பினும், தேவையான அளவிற்கு தொழிலாளர்கள் இணைக்கப்பட முடியாததன் காரணத்தினால் வேலைத்தளத்தின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்ட இலக்கை அடைவதற்கு முடியாமைக்கு நேரடியாக தாக்கியது. | கூட்டுத்தாபனம் ஏற்றுக்கொண்ட ஒப்பந்த நடவடிக்கைகள் முறையான முகாமைத்துவத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட கால எல்லைக்குள் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கிரயம் ரூபா 51.10 மில்லியனான கூட்டுத்தாபனம் ஏற்றுக்கொண்ட 07 ஆலோசனை சேவை ஒப்பந்தங்கள் மீளாய்வாண்டு இறுதியில் பௌதீக முன்னேற்றம் 65 தொடக்கம் 100 சதவீதம் இடையேயான அளவில் காணப்பட்டிருப்பினும் எந்தவொரு நிதி முன்னேற்றமும் பெற்றிருக்கவில்லை. அத்துடன் கடந்த வருடத்தினுள் வேலை ஆரம்பிக்கப்பட்ட ரூபா 26.76 மில்லியன் 10 ஆலோசனை சேவை ஒப்பந்தங்களின் வேலைகள் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | ரூபா 24.16 மில்லியனான 08 ஆலோசனை சேவை ஒப்பந்தங்களில் 05 ஒப்பந்தங்களின் வேலைகள் மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 03 ஒப்பந்தங்களின் வேலைகள் பூரத்தி செய்ய முடியவில்லை. | கூட்டுத்தாபனம் ஒப்புக்கொண்ட ஒப்பந்தங்கள் தொடர்புடைய கால வரைக்குள் பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவில் எடுத்தல் வேண்டும். |

(இ) 2013 ஆகஸ்து 30 திகதிய 13/1144/503/087 இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் வேரஸ்கஹ மழை நிர் வடிக்கால் மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்துவதற்காக ரூபா 14,227 மில்லியன் கடன் பணம் திறைசேரி உத்தரவாதத்தின் அடிப்படையில் தேசிய சேமிப்பு வங்கியினூடாக கூட்டத்தாபனத்திற்கு பெற்றுக்ககொடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தினால் 2014 யூலை 14 ஆம் திகதி 14 ½ வருடங்களில் கடன் பணம் மீள் செலுத்தும் உடன்பாட்டின் அடிப்படையில் தேசிய சேமிப்பு வங்கியினூடாக கடன் ஒப்பந்தமொன்றுக்கு உடன்பட்டிருந்தது. நுகேகொடை, ரத்தனபிடிய, பொரலஸ்கமுவ, பிரியந்தலை மற்றும் வெஹெர பிரதேசங்களில் மழை காலங்களில் ஏற்படும் வெள்ளத்தை கட்டுப்படுத்தல், காணப்படுகின்ற ஓடை வழிகளை விரிவாக்கல், ஓடை வரம்பு பாதுகாப்பு, வெள்ள நீர் தேங்கும் பிரதேசங்களை பாதுகாத்து குளங்களை கட்டுவித்தல், புதிய கால்காய்கள் மற்றும் பாலங்களை நிர்மாணிப்பதும் செயற்திட்டத்தின் பிரதான நோக்கங்களாயின. அத்துடன் 2017 திசெம்பர் 07 திகதிய அமப/17/2561/724/112 இலக்க அமைச்சரவை தீர்மாணத்தின் பிரகாரம் ரூபா 14,227 மில்லியனுக்காக உடன்பட்ட ஒப்பந்தம் நீக்கப்பட்டு அத் திகதிக்கு பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் பணமாகிய ரூபா 2,550 மில்லியனுக்காக புதிய கடன் ஒப்பந்தம் உடன்படுவதற்கு மற்றும் தொடர்புடைய கடன் தவணை மற்றும் வட்டி செலுத்தப்பட தேவையான பணம் மற்றும் செயற்திட்டம் தொடர்ச்சியாக கொண்டு செல்வதற்கான செலவு வருடாந்த வரவு செலவு திட்டதினூடாக நிதி ஏற்பாடு ஒதுக்கப்படுவதற்கும் உத்தேசிக்கப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்டத்தின் அசாதாரண கால தாமதத்தை தவிர்த்து சரியான காலத்திற்கு செயற்திட்டம் பூர்த்தி செய்யக்கூடிய புதிய வேலை திட்டம் முகாமைத்துவத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அத்துடன் ரூபா 71.60 மில்லியன்

2018 இல் இறுதி அரையாண்டில் நாட்டில் காணப்பட்ட அரசியல் நிலையின்மை காரணமாக உத்தேசிக்கப்பட்ட பணிகளுக்காக தொடர்புடைய பெறுகை அனுமதிகள் பெற்றுக்கொள்வதற்கான கால தாமதத்தினால் திட்டமிடப்பட்டிருந்த பிரகாரமாக செயற்திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு இயலாது போனது. காணி கையகப்படுத்தல் செயல்பாட்டிற்காகவும் கூட்டுத்தாபனத்திற்கு பாரிய முயர்சி மற்றும் அதிக காலம் செலவிடுவதற்கு நேர்ந்தமையும் தாமதத்திற்கு காரணங்களாகின. கால தாமதம் ஒரு வருடத்திற்கு மேல் மீதிகள் உள்ள துணை ஒப்பந்தங்களுக்காக காணி கையகப்படுத்துவதில் தாமதம் பாதிக்கப்பட்டிருந்தது.

கடன் பெற்றுக்கொள்வதின் நோக்கங்கள் நிறைவேற்றப்படுவதற்காக செயற்திட்டம் குறிக்கப்பட்ட காலவரைக்குள் நிறைவேற்றப்பட்டு செயற்திட்டத்தின் இலக்கு பயனாளிகளுக்கு பயன் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ஒப்பந்தக்காரர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணம் அசாதாரண காலமாக ஒப்பந்தக்காரர்களிடம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.7 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) அரசின் பெறுகை வழிக்காட்டி கோவையின் 4.2 இற்கமைய எதிர்வரும் 03 வருடங்களுக்கு தொடர்புடைய (2017-2020) பெறுகை செயற்பாடுகள் உள்ளடங்கும் வகையில் பிரதான பெறுகை திட்மொன்று கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் மீளாய்வாண்டிற்காக விபரமான பெறுகை திட்மொன்றும் தயாரிக்கப்படாமல் துணை செயற்பாடுகளுக்குரிய திட்டமொன்று மட்டும் தயாரிக்கப்பட்டிருந்தது. அத் துணை செயற்பாடுகளுக்குரிய மதிப்பிடப்பட்ட பெறுமதி மற்றும் அப் பெறுமதிகளுக்கு தொடர்புடைய பணிக்கப்பட வேண்டிய பெறுகை குழு என்ன என்று மற்றும் பெறுகைகளுக்கு தொடர்புடைய சரியான காலவரைகள் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அரசின் வழங்களுக்காக மட்டும் அத்துணை திட்டம் தயாரிக்கப்படடிருந்ததுடன் கூட்டுத்தாபனத்தின் செயற்திட்டம் மற்றும் வாடிக்கையாளர் செயற்திட்டங்களுக்கு தொடர்புடைய பெறுகை நடவடிக்கைகள் அதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | வருங்காலத்தில் இந்த அறிக்கையின் பிரகாரம் பெறுகை திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரசின் பெறுகை வழிக்காட்டி கோவைக்கமைய பெறுகை திட்டமொன்று தயாரித்து அனைத்து பெறுகை நடவடிக்கைகளும் தொடர்புடைய திட்டத்திற்கமைய மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) அரசின் பெறுகை வழிக்காட்டி கோவையின் 8.9.1 இற்கமைய ஒப்பந்தக்காரர்களுக்கு ஏற்றுக்கொள்ளும் கடிதம் வெளியிட்டவுடன் தரப்பினர்கள் ஒப்பந்த உடன்படிக்கைக்கு உடன்பட வேண்டியிருப்பினும் மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தினால் ரூபா 19.52 மில்லியன் பெறுமதியான 03 ஒப்பந்தங்கள் வழங்கும் போது அவ்வாறான ஒப்பந்தமொன்றுக்கு உடன்பட்டிருக்கவில்லை. | வழங்கல் கடிதம் இரு தரப்பினர்களாலும் சட்ட ரீதியான ஆவணங்களாக பயன்படுத்தப்படும். | அரசின் பெறுகை வழிக்காட்டி கோவையின் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அரசின் பெறுகை வழிக்காட்டி கோவையின் 3.4 இற்கமைய சந்தை விலை அமைப்பின் கீழ் (Shopping) பொருட்கள் கொள்வனவின் போது குறைந்த பட்சத்தில் 03 ஏல விலைகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு கொள்வனவு மேற்கொள்ளடீவண்டியிருப்பினும் மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனம் மேற்கொண்ட ரூபா 11.09 மில்லியன் பெறுமதியான 06 பெறுகைகளும் இந்த தேவைக்கு முரணாக ஒரு ஏலம் மட்டும் ஆய்வுக்குட்படுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் மற்றும் மஞ்சல் பக்கங்களில் (yellow pages) 05 வழங்குனர்களுக்கு அதிக அளவிற்கு அழைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | அரச பெறுகை வழிக்காட்டி கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை பின்பற்றி பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனம் ஒலியமுல்லை எக்கி நிலையத்திற்காக ரூபா 82.90 மில்லியன் பெறுமதியுடைய 02 நீர் விசையியக்க குழாய்கள் கொள்வனவு கெய்யப்பட்டு பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பினும் அந்த வழங்குனருக்கு சேவை நிலையம் இல்லாததனால் குழாய்களின் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதில் இடர் ஏற்பட்டிருந்தது. ஏல ஆவனங்களுக்கமைய ஏல அழைத்தலின் போது சேவை நிலையத்தின் தேவை குறிப்பிடப்பட்டிருந்தபோதும் அது கவனிக்கப்படாமல் கொள்வனவு மேற்கொண்டிருத்தல் பிரச்சனையான நிலையாக காணப்பட்டது. | ஒலியமுல்லை மழை நீர் வடிக்கால் மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிப்பதற்கு குறிக்கப்பட்ட எக்கி நிலையத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட குழாய்கள் பராமரிப்பு நடவடிக்கைகள் குறைந்தபட்ச நீண்ட கால நிலைத்தன்மை உறுதிப்படுத்தப்பட்ட குழாய் ஆகும். | இயந்திரங்கள் கொள்வனவின் போது விற்பனைக்கு பின்னரான சேவை பெற்றுக் கொளவதின் தேவை தொடர்பாக கவனிக்கப்படல் வேண்டும். |
| (உ) | கூட்டுத்தாபனத்தின் அனைத்து பெறுகைகள் தொடர்பாகவும் நடவடிக்கை எடுப்பதற்காக வேறாக வழங்கல் பிரிவொன்று நிறுவப்பட்டிருக்கையில் அப் பிரிவின் அறிவு இல்லாது மீளாய்வாண்டில் வேரஸ் ஆறு மழை நீர் கால்வாய் மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 523.5 மில்லியன் பெறுமதியான 19 பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | இந்த பணிகள் செயற்திட்டத்தினூடாக மேற்கொள்ளப்படுவது கூட்டுத்தாபன வழங்கல் பிரிவு நாள்தோரும் பாரிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற அதாவது செயற்திட்டத்தின் துணை செயற்திட்டங்களுக்கு கொடுக்கப்படுகின்ற காலவரையின் கீழ் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டிய பெறுகை நடவடிக்கைகள் வழங்கல் பிரிவில் இருந்து நிறைவேற்றுவதற்கு கவனிக்கப்பட வேண்டிய காலவரை கடக்கப்படுவதனால் அது செயற்திட்டத்தின் வினைத்திறனுக்கு மோசமாக பாதிக்கலாம். | பெறுகை நடவடிக்கைகள் வெளிப்படையாக மேற்கொள்ளல் மற்றும் கூட்டுத்தாபனம் அறிமுகப்படுத்தியுள்ள அதிகாரங்களின் பிரகாரம் மேற்கொள்ளல் வேண்டும். |

### 3.8 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணம் பெற்றுக்கொள்ளாமல் ரூபா 545.06 மில்லியன் பெறுமதியான 04 வாடிக்கையாளர் செயற்திட்டங்கள் கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டினுள் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணம் பெற்றுக்கொள்ளாமல் ஒப்பந்தங்கள் நிறைவேற்றல் கணக்காய்வின் போது பிரச்சனையாகியது. மேலும் செயற்திட்டம் தொடர்பாக இரு தரப்பினருக்கும் இடையில் முறையான ஒப்பந்தமொன்று உடன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நகர அபிவிருத்தி அதிகார சபையினால் சில தடைவைகள் Mobilization Advance Payment Guarantee திருத்தப்படுவதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளதனால் இறுதி திருத்தப்பட்ட ஆவணங்கள் 2018.07.03 ஆம் திகதியன்று ஒப்புக்கொடுக்கப்பட்டிருப்பினும் அது வரையிலும் முதல் பட்டியல் முன்வைக்கப்பட்டிருப்பினும் அணிதிரட்டல் முற்பணம் (Mobilization Advance Payment) நீக்கப்பட்டு முதல் பட்டியலுக்கு தொடர்புடைய பணம் இந்த கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | அரசின் பெறுகை வழிகாட்டி கோவைக்கமைய வாடிக்கையாளர் ஒப்பந்தங்கள் பொறுப்பேற்பதற்கு முதன்மை வேலைகள் ஆரம்பிப்பதற்கான முற்பணம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ஒப்பந்தங்கள் தொடர்புடைய தரப்பினர்களுக்கிடையில் முறையான ஒப்பந்தமொன்று உருவாக்கல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டினுள் கூட்டத்தாபனம் செயற்படுத்திய 07 வாடிக்கையாளர்கள் செயற்திட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்காக கூட்டுத்தாபனம் அறவிடாத பெறுமதி ரூபா 232.21 மில்லியன் ஆனதுடன் அது மொத்த செய்யப்பட்ட வேலைகளில் 74 சதவீதமாக காணப்பட்டது. கூட்டுத்தாபனம் சரியான நேரத்தில் விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்படாமை, அனுமதியில்லாது மேலதிக வேலை மேற்கொள்ளல், அளவு தாள் விகிதங்களை அனுமதித்துக்கொள்ளாமை, நிர்மாணிப்பு நடவடிக்கைகளில் ஏற்பட்ட பிரச்சனைகளுக்கு நேரடியாக தாக்கப்பட்டிருந்தது. | செயற்படுத்தப்பட்டு வருகின்ற செயற்திட்டங்களுக்காக முன்வைக்கப்படுகின்ற பட்டியல் உறுதிப்படுத்தப்படும் போது கவனிக்கப்பட வேண்டிய தாமதம் ஏற்பட்டுள்ளதுடன் தொடர்புடைய வாடிக்கையாளர் அல்லது ஆலோசனை சேவை வழங்குகின்ற நிறுவனத்தில் தாமதங்கள் நடந்துள்ளது. | கூட்டுத்தாபனத்தினால் பொறுப்பேற்ற ஒப்பந்தங்கள் முறையான முகாமைத்துவத்துடன் நிறைவேற்றப்பட வேண்டியதுடன் நிர்மாணித்தல் இடர்கள் குறைத்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டு இறுதி வரையில் கூட்டுத்தாபனத்தினால் செயற்படுத்தப்படுகின்ற 98 ஒப்பந்தங்களின் வேலை பெறுமதி ரூபா 5,110 மில்லியன் ஆக இருந்ததுடன் அதில் ரூபா 1,076 மில்லியன் ஆன மேற்கொள்ளப்பட்ட வேலைகள் உறுதி செய்யப்படுவதற்கு வாடிக்கையாளர்கள் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் உறுதி செய்யப்பட்ட வேலை செய்யப்பட்ட பெறுமதியில் இன்னுமாக அறவிடப்பட வேண்டிய பெறுமதி ரூபா 391 மில்லியனானதுடன் வாடிக்கையாளர்கள் தக்க வைத்துக் கொண்ட முற்பணம் ரூபா 258 மில்லியன் ஆனது. கூட்டுத்தாபனம் ஒப்பந்த முகாமைத்துவத்திற்காக அதிக கவனம் செலுத்தப்படாமை அந் நிலைக்கு காரணமாகியிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | ஒப்பந்த நடவடிக்கைகள் முறையான மேற்பார்வையுடன் மேற்கொண்டு செய்யப்பட்ட வேலைகள் உறுதி செய்யப்படுவதற்கு போதுமான கவனம் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | வேரஸ் ஆற்று மழை நீர் கால்வாய் மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் செயற்திட்டத்தின் ரூபா 1340.60 மில்லியன் மதிப்பிடப்பட்ட பணிகள் மீளாய்வாண்டினுள் நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனம் திட்டமிடப்பட்டிருப்பினும் மெய்யாக ரூபா 871.97 மில்லியன் ஆன பணிகள் மட்டும் நிறைவேற்றப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ரூபா 468.63 மில்லியன் பெறுமதியுடைய பணிகள் நிறைவேற்றப்படாததுடன் மீளாய்வாண்டில் திறைசேரியில் இருந்து இதற்காக பெறப்பட்டிருந்த பணம் ரூபா 1,205 மில்லியனாக காணப்பட்டது. | 2018 ஆம் ஆண்டில் முதல் காலாண்டுகளில் திட்டமிட்டிருந்த பிரகாரம் செயற்திட்டத்தின் உத்தேசிக்கப்பட்ட பணிகள் நிறைவேற்றப்பட்டு இருப்பினும் வருடத்தின் கடைசி அரையாண்டில் நாட்டில் காணப்பட்ட அரசியல் நிலையின்மை காரணமாக உத்தேசிக்கப்பட்ட பணிகளுக்காக தொடர்புடைய பெறுகை அனுமதிகள் பெறுவதில் ஏற்பட்ட சிரமத்தினால் திட்டமிடப்பட்டிருந்த திகதிக்கு நிறைவேற்றுவதற்கு முடியாது போனது. அக் காரணத்தினால் எதிர்பார்க்கப்பட்ட மொத்த பணிகள் நிறைவேற்றுவதற்கு முடியாது போனது. | திட்டமிடப்பட்டிருந்த பிரகாரம் ஒப்பந்த வேலைகள் திட்டமிடப்பட்டிருந்த காலத்திற்குள் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.9 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 திகதிக்கு கூட்டுத்தாபனத்தின் அனுமதிக்கப்பட்ட பணி நிலை 1,875 ஆனதுடன் அத்திகதிக்கு மெய்யான பணி நிலை 1,431 ஆனதினால் கூட்டுத்தாபனத்தின் பணி நிலையில் 405 வெற்றிடங்கள் இருந்ததுடன் 39 நபர்களின் மேலதிக பணி நிலையாகவும் காணப்பட்டது. | செயற்திட்டங்களில் சேவை தேவைகள் கவனத்திற் கொண்டு பணி நிலையின் வெற்றிடங்களில் தேவையான பதவிகள் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 25/2014 இலக்கமுடைய மற்றும் 2014.11.12 திகதியுடைய அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் | கூட்டுத்தாபனத்தின் அனுமதிக்கப்பட்ட பணி நிலைக்கு அமைய வெற்றிடங்கள் மற்றும் மிகையான பதவிகளும் திருத்தப்பட |

| | | | |
|---|---|---|---|
| | | ஊழியர்கள் நிரந்தரமாக்கல் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தின் அனுமதிக்கப்பட்ட ஊழிய எண்ணிக்கையில் 39 ஊழியர்களின் மிகையொன்று இணங்காணப்பட்டது. | வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் கூட்டுத்தாபனத்தின் நிர்வாக நிறுவனமான காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி செய்யும் நிறுவனம் மற்றும் எல். ஆர். டி. சீ சேவை நிறுவனத்திலிருந்து சம்பளம் மீள் நிரப்பப்படல் அடிப்படையில் கூட்டுத்தாபனத்திற்கு இணைக்கப்பட்ட பணி நிலை முறையாக 126 மற்றும் 800 ஆக இருந்ததுடன் இந்த பணி நிலைக்காக கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டு இறுதியில் சம்பளமாக கொடுப்பனவு செய்கின்ற பணம் ரூபா 173.64 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும் ˙இந்த செலவுக்காக வருடாந்த வரவு செலவினூடாக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் இந்த ஊழியர்களும் உள்ளடங்கலாக பணி நிலை திருத்தப்படுவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் மேற் குறிப்பிட்ட பணி நிலைக்கு மேலதிகமாக மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தினால் வேலைத்தளங்களின் பணிகளுக்காக நாளைக்கு ரூபா 750 ஆன கொடுப்பனவின் கீழ் சிவில் பாதுகாப்பு திணைக்களத்திலிருந்து 175 ஊழியர்களின் சேவையும் பெறப்பட்டிருந்தது. | எல். ஆர். டி. சீ சேவை நிறுவனத்திலிருந்து, காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி செய்யும் நிறுவனத்திலிருந்து மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்திலிருந்து இணைக்கப்பட்ட ஊழியர்களின் சம்பளம் தொடர்புடைய செயற்திட்டங்களின் BOQ களில் உள்ளது. இந்த செலவு, வருடாந்த வரவு செலவில் செயற்திட்டத்தின் கிரயத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. | சேவைக்காக பணிக்கப்படுகின்ற தேவையான ஊழியர்களும் உள்ளடங்கலாக கூட்டுத்தாபனத்தின் அனுமதிக்கப்பட்ட பணி நிலையின் தேவைக்கேற்ப திருத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் இருந்த பொது மேலாளர் தற்காலிக அடிப்படையில் ஒரே வரிசையிலுள்ள அமைச்சொன்றிற்கு மாற்றப்பட்டடு அனுப்பப்பட்டிருந்தார். பொது மேலாளருக்காக மேற்கொள்ளப்படுகின்ற உள்ளக ஒழுக்காற்று ஆய்வொன்று இவ் இடமாற்றலுக்கு காரணமாகியது என தீர்மாணத்தினுள் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் 2019 ஆகஸ்து வரையில் 1 ½ வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருப்பினும் அவ்வாறான ஒழுக்காற்று ஆய்வு கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படாமை கணக்காய்வின் போது சர்ச்சை தன்னையான விடயமாகியதுடன் கூட்டுத்தாபனத்திற்கு எந்தவொரு சேவையும் பெற்றுக் கொண்டு மீளாய்வாண்டிற்காக அந்த ஊழியருக்கு மற்றைய வசதிகள் இல்லாது சம்பளமாக ரூபா 2.29 மில்லியனும் செலுத்தப்பட்டிருந்தது. | பணிப்பாளர் கபையின் மற்றும் அமைச்சின் உடன்பாட்டின் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தின் பொது மேலாளர் தற்காலிகமாக 2017.12.29 திகதியிலிருந்து மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சுக்கு இணைக்கப்பட்டுள்ளது. அவருக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்றும் காணப்படுவதனால் அவ் வழக்கு இறுதியில் அவர் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தகுதியானது என பாதுகாப்பு சபை தீர்மாணித்துள்ளது. 2019 ஏப்ரல் மாதத்திலிருந்து கூட்டுத்தாபனத்தினூடாக பொது மேலாளருக்கு சம்பள கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை. | உள்ளக ஒழுக்காற்று ஆய்வு முறையாக மற்றும் காலவரைக்குள் பேணப்பட்டு ஊழியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

### 3.10 வாகனத் தொகுதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ஓட்டத்திற்காக பணிக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் வாகன எண்ணிக்கை 102 ஆகியதுடன் கூலி அடிப்படடையில் பெற்றுக் கொள்ளப்பட்ட வாகனங்கள் 36 ஆக காணப்பட்டது. கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான வாகனங்களில் 18 வாகனங்கள் ஊழியர்களுக்கு இணைக்கப்பட்டுள்ளதுடன் 19 வாகனங்கள் இருப்பு வாகனங்களாக காணப்பட்டன. அதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் இருப்பு வாகனங்களாக காணப்பட வேண்டிய 65 வாகனங்கள் போக்குவரத்து ஊழியரின் மேற்பார்வை இல்லாது கூட்டுத்தாபனத்தின் வெவ்வேறு பிரிவுகளுக்கு | கணக்காய்வு அறிக்கையினூடாக காட்டப்பட்டுள்ள பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்குரிய மற்றும் அனைத்து கூலி அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் போக்குவரத்து முகாமைத்துத்தின் மேற்பார்வையின் கீழ் பேணி செல்வதற்கு தொடர்புடைய நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும். | கூட்டுத்தாபனத்தின் வாகன போக்குவரத்து பிரிவில் முறையான மேற்பார்வையின் கீழ் ஓட்டப்பட்டு கூலி வாகனங்கள் பெற்றுக் கொள்ளல் குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

இணைக்கப்பட்டிருந்தது. இந்த வாகனங்கள் கூட்டுத்தாபனத்தின் போக்குவரத்து பிரிவினூடாக கட்டுப்படுத்தப்படாததினால் அவைகள் முறையான ஓட்டத்திற்கு உட்படுத்தப்படவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் கூலி அடிப்படையில் வாகனங்கள் பெற்றுக்கொள்வதற்கு இந்த நிலை நேரடியாக தாக்கப்பட்டுள்ளமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான வாகனங்களுக்காக மீளாய்வாண்டில் ரூபா 28.15 மில்லியன் எரிபொருளுக்காக ஏற்க்கப்பட்டுள்ளதுடன் ரூபா 51.54 மில்லியன் கூலி அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட வாகனங்களுக்காகவும் செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| கூட்டுத்தாபனத்தினால் 2018 -2022 வலையான 05 வருட காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருப்பினும் கூட்டுத்தாபன சட்டத்தினூடாக பணிக்கப்பட்டுள்ள பிரதான பணிகளாகிய நாடு முழுதும் காணப்படும் விளை நிலங்கள், தரிசு அல்லது சேற்று நிலங்களை அடையாளம் கண்டு அங்கிகரிக்கப்படாத காணி நிரப்புதல் கட்டுப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல், ஓடை எல்லையிலுள்ள ஏதேனும் காணி பிரதேசம், காணி பாதுகாப்பு பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டு அப் பாதுகாப்பு பிரதேசத்திற்குள் தற்காலிகமாக அல்லது வேறு நிர்மாணிப்புக்கள் தவிர்க்கும் | 03 மாகாணங்களுக்கு தொடர்புடைய பிரசுரிக்கும் நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. ஓடை பாதுகாப்பு வருங்காலத்தில் வர்த்தமானி அறிவிப்பினூடாக பிரசுரிக்கப்படவும், கூட்டிணைந்த திட்டம் திருத்தப்படும் சந்தர்ப்பத்தில் அதன் பணிகள் கூட்டிணைந்த திட்டத்திற்கு உள்ளடக்கப்படவும் நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டிணைந்த சட்ட்தினூடாக பணிக்கப்பட்டுள்ள நோக்கங்கள் நிறைவேற்றப்படுவதற்கு போதுமான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

பிரகாரம் வர்த்தமானி அறிவிப்பினூடாக பிரசித்திப்படுத்தல் அக் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கு தொடர்புடைய வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்திற்கு உள்ளடக்கப்படாத 03 செயற்திட்டங்களின் நிர்மாணிப்பு நடவடிக்ககைகளுக்காக ரூபா 3.86 மில்லியன் கூட்டுத்தாபனம் செலவிடப்பட்டிருந்ததுடன் செயல் நடவடிக்கை திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருந்த வருடத்தினுள் செயற்படுத்தப்பட வேண்டிய ரூபா 34.51 மில்லியன் பெறுமதியான 04 செயற்திட்டங்கள் நிர்மாணிப்பதில் கூட்டுத்தாபனம் தோல்வி கண்டிருந்தது. | செயற்திட்டம் 03, 2018 வருடத்தின் செயல் நடவடிக்கை திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமை 2018 வருடமாகும் போது இச் செயற்திட்டங்களில் செறலாற்றல் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படாததனால் ஆகும். | கூட்டுத்தாபனத்தின் வருடாந்த திட்டத்திற்கமைய செயற்திட்டம் செயற்படுத்தல் வேண்டும். |

**4.3 பாதீட்டு கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவு மெய்யான வருமானம் மற்றும் செலவுடன் ஒப்பிடும் போது 9 சதவீதம் தொடக்கம் 67 சதவீதம் வரையான வீச்சுக்குள் அளவு மாற்றங்கள் அவதானிக்கப்பட்டதில் ஆவனங்கள் பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாடு கருவியாக பணிக்கப்படாமை அவதானிக்கப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வரவு செலவு ஆவனங்கள் பயனுள்ள கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தல் வேண்டும். |

**4.4 வருடாந்த அறிக்கை சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |

| | | |
|---|---|---|
| 2003 யூன் 02 திகதிய பீஈடி/12 இலக்கமுடைய அரச வணிக சுற்றறிக்கையின் 6.5.3. பந்தியிற்கு அமைய நிதி ஆண்டு நிறைவடைந்து 150 நாட்களுக்குள் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எனினும் கூட்டுத்தாபனத்தினால் 2016 ஆம் வருடத்தின் வருடாந்த அறிக்கை 2019 ஆகஸ்து 31 திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றரிக்கையின் ஆலோசனைகளுக்கேற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.5 நிலைப்பேறான அபிவிருத்தி இலக்கை அடைதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2017 ஆகஸ்து 14 திகதிய என்/பீ/எஸ்/பீ/17 இலக்கமுடைய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதளர அலுவல்கள் அமைச்சின் செயளாலரினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய ஒன்றியத்தின் 2030 ‘‘நிகழ்ச்சி நிரல்’’ பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களினாலும் நிலைபேறான அபிவிருத்தி அடையப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனினும் கூட்டுத்தாபனத்தினால் தன் நோக்கெல்லைக்கு கீழ் உள்ளடக்கப்படுகின்ற பணிகள் மேற்கூறப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றுவதற்காக எவ்வாறு செயற்படுத்த வேண்டும் என அறிந்திருக்கவில்லை. அக் காரணத்தினால் நிலை பேறான அபிவிருத்தி நோக்கம், குறிகோள் மற்றும் நோக்கங்களை அடையும் முறை, இலக்குகளை அடைதலுக்காக உரிய குறிக்காட்டியும் அடையாளப்படுத்தப்பட்டிருக்கவில்லை.. | நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி குறிக்காட்டிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள நிலைபோறான அபிவிருத்தி இலக்கினூடாக எங்களுடைய கூட்டுத்தாபனத்தில் நோக்கெல்லைக்கு உள்ளடக்கப்படுகின்ற விடயங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள துடன் அது தொடர்பாக எதிர்வரும் சில மாதங்களுள் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கை விரைவில் அடையாளப்படுத்திக்கொண்டு அவ் இலக்குகளை அடைவதற்கான தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுத்தல் வேண்டும். |